இன்னும் 120,000 டன் கரும்பை இந்த ஆலை அரைக்க வேண்டியுள்ளது. இந்த அரைவை வேலை, மே மாதம் மூன்றாவது வாரத்திற்குள் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கரும்பினை உரிய காலத்தில் வெட்டி அரைவைக்குக் கொண்டு வராத காரணத்தால் கரும்பிலே இருக்கிற சாறுகள் அதிகம் வற்றிவிடுகின்றன. ஆகவே, விவசாயிகளுககுப் பெருத்த நட்டம் ஏற்படக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. அதற்கான நட்ட ஈட்டை அரைவை முதலாளிகளிடம் வாங்கித்தர அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிய பார்கவா கமிட்டியினுடைய ரெக்கமண்டேஷன்படி, இவ்வாறு கரும்பு அந்தக் காலத்தில் தவறி, முன்னாலோ அல்லது பின்னாலோ அரைக்கப்படுமானால் அதற்கு மத்திய அரசாங்கத்தினர் எக்ஸைஸ் டியூட்டி ரிபேட் கொடுக்கிறார்கள். அந்த ரிபேட்டை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இவ்வரசு தெரிவித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலையில் இதுபோன்ற ஸ்டிரைக்குகள் அடிக்கடி ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு சுமூகமான தீர்வை ஏற்படுத்தி, இனிமேல் பாதிக்காத வகையில் ஏற்பாடு செய்ய செயல் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்தச் சர்க்கரை ஆலையிலே வேலை நிறுத்தம் ஏற்பட சரியான காரணம் இல்லை. அரசாங்கம் ஏற்கனவே, ரூ. 25 அதிகமாக, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளுக்குத் தனியாக ஊதிய உயர்வு தந்திருக்கிறது. அதற்கு மாறாக சில சூழ்நிலைகளையொட்டி புகலூரிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம் அரசியலடிப்படையில் ஏற்பட்டதே தவிர தொழிலாளிகள் பிரச்னையில் அல்ல. அப்படிப்பட்ட நிலையைத் தொழிலாளிகள் இப்பொழுது உணர்ந்திருக்கிறார்கள். இனிமேல் இவ்வாறு நடக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அடுத்து, 1975–76-ம் ஆண்டின் செலவிற்காக முன்பண மான்யக் கோரிக்கைகள் (செலவின கணக்கின்) மீது விவாதமும் வாக்கெடுப்பும். விவாதம் இல்லாமலேயே இதை நிறைவேற்றி விடலாம் என்று அலுவல் ஆய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

. . . .

(ஈ) வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக வழங்கப்பட்ட புத்தகங்களில் உள்ள புள்ளி விவர முரண்பாடு பற்றியும் நிதி ஒதிக்கீடு சட்ட மூன் வடிவு நிறைவேற்றப்படும் வரை பேரவைக்கு வரட்சி நிவாரண செலவு பற்றிய வாராந்திர கணக்கு அளிப்பது குறித்தும்.

Dr. H.V. HANDE : I am not going into any discussion. My only point is this ....I am raising a point of order. I do not know whether we can discuss this or not. There are gross irregularities brought to our attention only a couple of days ago. I have brought that to the attention of the Hon. Chief Minister also. There is the Annual Plan for 1975-76. There is the Budget Estimates given in the Budget Memorandum. In a number of pages, and in the Tables also, the figures given do not correspond to each other. There is wide variation between the two figures............

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பின்னாலே அப்ரோபிரியேஷன் பில் வரும்போது பேசிக்கொள்ளுங்கள்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : அதற்குப் பிறகு ஒன்றும் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இப்பொழுது முன்டணை மான்யக் கோரிக்கை மட்டும்தான் வருகிறதே தவிர நீங்கள் சொல்வதைப் பற்றி பின்னால் பேசிக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பிறகு பேசிககொள்கிறோம். ஆனால், இப்பொழுது இருக்ககூடிய பிரச்னைகள் எல்லாம் பல குறைபாடுகளிருக்கின்றன. நான் டீடெய்ல்சுக்குப் போகவில்லை. ஆனால், இருப்பதைப் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

The outlay on large and medium industries is given as Rs. 16·9 crores, in the Annual Plan under Industries; it is given as Rs. 6·2 crores in the Budget Memorandum.

இன்டஸ்ட்ரிஸிலே என்று கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே ரூ. 6.2 கோடி என்ற கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட மெமோராண்டத்திற்கும் annual பிளானுக்கும் வேறுபாடு இருக்கிறது. இரண்டாவது கிட்டத்தட்ட 1/4 பங்கை, 3 மாதங்களுக்காக நாம் வழங்குகிறோம். ஆண் டிற்கு எவ்வளவு என்று பார்த்து, அதிலே 1/4 பங்கு தான் வோட் ஆன் அக்கவுண்டுக்கு வாங்கப்படுகிறது. சில விஷயங்கள் இங்கே விட்டுப் போயிருக்கின்றன.

In certain cases, payments and adjustments are usually made at the end of the year. Therefore, they are not given. In certain cases we have to make more demands.............
எல்லாம் என்ன பண்ணியிருக்கிறார்கள்? 1/4 பங்கு என்று, மேத்த